## சிரம வாசனா நிதியம் - 2014

சிரமவாசனா நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1998 இன் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதிய அதிகாரச்சட்டத்தின் 12(4) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னாள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிசார்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை சிரம வாசனா நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதானகருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

மீளாய்வாண்டின் போது நிலையான சொத்துக்களுக்குரிய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் பெறுமானத்தேய்வு வீதம் 10 சதவீதத்திலிருந்து 20 சதவீதம் வரையிலும் தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் என்பவற்றின் பெறுமானத்தேய்வு வீதம் 7.5 சதவீதத்திலிருந்து 10 சதவீதம் வரையிலும் திருத்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 41,800 பெறுமதியான கணனி மற்றும் உப பாகங்கள் என்பவற்றை நிலையான சொத்துக்களுக்காக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக மீண்டெழும் செலவினமாக எழுதுகருவிகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டின் சொத்துக்கள் மற்றும் மிகையின் பெறுமதி என்பன அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிதியத்தின் மீதி ரூபா 292,139,776 தொகையாக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி ரூபா 292,153,541 ஆக முன்கொண்டு வரப்பட்டமை காரணமாக ரூபா 13,765 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன், அவ்வேறுபாட்டிற்கு காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

திறைசேரி செயற்பாட்டு திணைக்களம் மற்றும் தேசிய லொத்தல் சபை என்பவற்றால் மேற்கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தலின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய லொத்தர் வருமானம் ரூபா 289,368,951 ஆக இருந்த போதிலும், கணக்கின் பிரகாரம் கிடைக்க வேண்டிய லொத்தர் வருமானம் ரூபா 289,347,951 ஆக இருந்தமையால் ரூபா 221,100 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இவ்வேறுபாட்டிற்கு காரணமான விடயங்களை ஆராய்ந்து கணக்கினை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சிரமவாசனா அதிகாரச் சட்டம் | |
| (i) 6 ஆம் பிரிவு | அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்று வதற்காக ஊழியர்களின் நலன்புரி மேம்படுத்தல் மற்றும் ஊழியர்களின் நலன்புரிக்காக சிறந்த சேவைகளை செய்துள்ளவர்களுக்கு பரிசுகளை வழங்குதல் என்ற இரண்டு நோக்கங்களுக்காக வரைவிலக்கணப்படுத்தி நியதிகள் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 21 ஆம் பிரிவு | இந்நிதியம் ஊழியர்களின் நலன்புரி, மேம்பாடு, அவர்களுக்கு நிதி மற்றும் ஏனைய உதவிகளை வழங்குதல் மற்றும் பரிசுகளை வழங்குவதற்காக தாபிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக ஊழியர்களின் தங்கியிருப்போருக்கும் ஏனைய சார்ந்திருப்போரின் நலன்புரிக்காகவும் மீளாய்வாண்டின் போது ரூபா 4,532,846 தொகை செலவு செய்யப்பட்டிருந்ததுடன், இது ஒட்டுமொத்த நோக்கங்களை நிறைவேற்றும் செலவினத்தின் 23.64 சதவீதமாக இருந்தது. |
| (iii) 10 (ஈ) பிரிவு | சிரம வாசனா லொத்தர் மூலம் பெறப்படும் பங்களிப்பு திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தின் நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய போதிலும், 2008 ஒக்டோபர் மாதத்தின் பின்னர் அவ்வருமானத்தைப் பெற்றுக் கொள்ளாமையால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய வருமானம் ரூபா 289,347,951 ஆக இருந்தது. |
| (iv) (7)(2)(ஏ) பிரிவு | பெற வேண்டிய லொத்தர் பங்களிப்பு நிதியத்திற்கு கிடைக்காமையால் வருடாந்த மிகை சபையின் விருப்பின் பேரில் முதலீடு செய்து வருமானம் உழைப்பதற்கு முடியாதிருந்ததுடன், நிதியத்தில் செலவினங்களை மேற்கொள்வதற்கு பணம் இல்லாததன் காரணமாக காலாவதியான நிலையான வைப்புக்கள் மீண்டும் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (v) 13(1),(2),(3)ஆம் பிரிவுகள் | ஒவ்வொரு ஆண்டின் போதும் அச்சிடப்பட வேண்டிய லொத்தர்களின் எண்ணிக்கை, லொத்தர்களை நடாத்தும் முறை, லொத்தர் மூலம் வழங்கப்படும் பரிசுகள் மற்றும் உரிமை கோரப்படாத பரிசுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகின்ற முறை தொடர்பாகவும் அந்தந்த லொத்தர் மூலம் வழங்கப்பட வேண்டிய பரிசுகளின் பெறுமதியையும் உள்ளடக்கியவாறான லொத்தர் நடாத்துவதற்கான வேண்டிய செலவினம் சம்பந்தமாக லொத்தர் சபை |

மற்றும் சிரம வாசனா நிதியத்திற்கிடையே இணக்கப்பாடொன்றிற்கு வந்திருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 39,281,320 மிகையாக இருந்ததுடன் இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 57,537,862 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 18,256,542 ஆன வீழ்ச்சியொன்று காணப்பட்டது. லொத்தர் விற்பனையால் கிடைத்த பங்களிப்பு ரூபா 3,648,670 ஆலும், முதலீடு மற்றும் ஏனைய வருமானம் ரூபா 3,091,317 ஆலும் குறைவடைந்தமை மற்றும் நிதியத்தை பராமரித்துச் செல்லல் செலவினம் ரூபா 2,743,742 ஆலும் நோக்கத்தினை நிறைவேற்றும் செலவினம் ரூபா 8,772,813 ஆலும் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான செலவினம், மொத்த வருமானத்தில் 30 சதவீதமான சிறிய அளவினைக் கொண்டிருந்ததுடன், அதிகாரச்சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான செயற்திட்டத்தை இனங்காணுதல், திட்டமிடல் மற்றும் அமுல்படுத்தல் என்பன முறைப்படி மேற்கொள்ளப்படாததன் காரணமாக இச்செலவினம் குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் மிகை, மொத்த வருமானத்தில் 60 சதவீதமான அளவிலான கூடிய பெறுமதியைக் கொண்டிருந்தது. இந்நிதியம் உருவாக்கப்பட்டமையால் அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு போதியளவு பணத்தை ஈடுபடுத்தாமல் இருந்ததுடன், மிகையை முதலீடு செய்து நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டிற்காக நிதியத்தினால் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைளைப் பரீட்சித்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் ஆண்டின் இலக்குகள் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டினுள் செயற்படுத்தப்படாத நிகழ்ச்சித்திட்டங்கள்

மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்த ரூபா 31.95 மில்லியனான இலக்குகளில் பின்வருமாறு 5.9 மில்லியன் அல்லது 19 சதவீதம் முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

| | நோக்கம் | வருடாந்த இலக்கு அளவு | வருடாந்த இலக்கு பெறுமதி (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|
| (i) | ஊழியர்கள் சேவையில் ஈடுபட்டிருக்கையில் முன் அறிவித்தலொன்று இல்லாமல் மூடப்பட்ட சந்தர்ப்பமொன்றில், அச்சேவையிலுள்ள ஊழியர்களுக்கு நிதி மற்றும் ஏனைய உதவிகள் வழங்கல் தொடர்பாக தொழில்நுட்ப கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் | 30 | 0.9 |
| (ii) | ஊழியர்களின் நலன்புரிக்காக சிறப்பாக சேவை புரிந்த நபர்களுக்கு பரிசுகளை வழங்கும் நோக்கத்தின் கீழ் பரசு வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் | 50 | 1.5 |
| (iii) | அவசர சந்தர்ப்பத்தில் சேவையிலுள்ள ஊழியர்களுக்கு மருத்துவ மற்றும் ஏனைய வசதிகள் வழங்கும் மருத்துவ பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் | 20 | 10 |
| (iv) | சிரம வாசனா நிதியத்திற்காக ISO சர்வதேச தரச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் | 01 | 0.6 |
| (v) | நிதியத்திற்காக கணனி முறைமையொன்றை தாபித்தலின் முதலாம் கட்டத்தை செயற்படுத்தல் | 01 | 1.9 |

(ஆ) பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றாததன் சதவீதம் 7 முதல் 68 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

| | நோக்கம் | நிகழ்ச்சித்தட்டங்கள் | நிறைவேற்றாத சதவீதம் |
|---|---|---|---|
| (i) | ஊழியர்களுக்கு எதிராக பரிசோதனை ஆரம்பிக்கப்படும் போது அவர்களுக்கு தற்காலிகமாக உதவிகளை வழங்குதல் | ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் | 68 |
| (ii) | பிரச்சினை சந்தர்ப்பங்களின் போது ஊழியர்களுக்கு / தங்கியிருப்போருக்கு நிதிசார் / வேறு உதவி வழங்குதல் | சட்ட உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் | 40 |
| (iii) | ஊழியர் நலன்புரி மேம்படுத்தல் | புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டங்கள் | 25 |
| (iv) | நிறுவனத்தை பலப்படுத்தல் | அறிவித்தல்கள் | 10 |
| (v) | நிதிய மேம்பாடும் விளம்பரமும் | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 07 |

(இ) நிதியத்தின் இலக்கிடப்பட்ட நோக்கத்தை சிறப்பாக நிறைவேற்றும் நோக்கில் உதவி முகாமைத்துவ உத்தியோகத்தரொருவரும் மூன்று முகாமைத்துவ உதவியாளர்களும் நிறுவகத்திற்கு ஆட்சேர்க்கப்பட்டு உரிய கடமைகள் கையளிக்கப்பட்டிருந்தன. எனினும் மீளாய்வாண்டிற்காக தாபிக்கப்பட்ட மேற்படி (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பிடப்பட்ட இலக்குகளை நோக்கி அடைவதற்கு முடியாதிருந்தமை அப்பதவியணியினரை ஆட்சேர்த்தமையால் நிறைவேற்றப்படாதிருந்தமை புலனாகின்றது. மேலும் மீளாய்வாண்டில் பதவியணியினருக்கான செலவினம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 1,822,816 அல்லது 82 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

## 4.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது சட்ட உதவி வழங்கும் உத்தேசத்திட்டத்தின் பிரகாரம் செய்வதற்கு பத்திரிகை அறிவித்தல் வெளியிடுவதற்கு ரூபா 175,997 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், 09 ஊழியர்களுக்கு சட்ட உதவியாக ரூபா 75,000 வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செயற்திட்டத்திலிருந்து வழங்கப்பட்ட நலன்கள் அளவை விட 234 சதவீதம் விளம்பரத்திற்கு செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரச்சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஊழியர்களுக்கான தொழில்சார் பயிற்சி முறைமைகள், சட்ட உதவி மும்மொழிவுத் திட்டங்கள், புலமைப்பரிசில் முன்மொழிவுத் திட்டங்கள், அனர்த்த உதவி உத்தேசத் திட்டங்கள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக தயாரிக்கப்பட்ட அறிவித்தல் பத்திரங்கள், கையேடுகள், விளம்பர அறிவித்தல்கள் என்பவற்றை அச்சிட்டு நாடுபூராகவும் அமைந்துள்ள மாவட்ட தொழில் அலுவலகங்களின் தொழில் உத்தியோகத்தர்கள் மூலம் உரிய ஊழியர்களுக்கு பகிர்ந்தளித்தல் நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துவதற்கு கவனம் செலுத்தப்படாதிருந்ததுடன், விரிவான அறிவித்தல் விளம்பர நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக நிதியத்தின் முன்மொழிவு முறைமைகள் தொடர்பாக ஊழியர்களை அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 நவம்பர் 21 ஆந் திகதிய 05/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் இலாபம் உழைக்கின்ற அரச நிறுவனங்களுக்கு உபகாரக் கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும் சிரம வாசனா லொத்தர் நாத்துவதினால் கிடைக்கின்ற வருமானம் செலவிடப்படாமை காரணமாக சிரம வாசனா நிதியத்தில் மிகை உருவாகியிருக்கையில் மீளாய்வாண்டிற்காக பதவியணியினருக்கு உபகாரக் கொடுப்பனவாக ரூபா 119,507 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) நிதியத்தை மேம்படுத்தல் மற்றும் விளம்பரச் செலவினமாக ரூபா 3,371,119 தொகை மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்ததுடன், அது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 261 சதவீத அதிகரிப்பொன்றாகும். நிறுவகம் உருவாக்கப்பட்ட அடிப்படை நோக்கத்தை மேம்படுத்துவதற்காக மேம்படுத்தல் மற்றும் விளம்பரச் செலவினங்களில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், வெவ்வேறு ஞாபகார்த்த சஞ்சிகைகளுக்கு வழங்கிய பணத்தினால் இச்செலவினம் தயாரிக்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுகின்றன.

(அ) 2007 ஒக்தோபர் 02 ஆந் திகதிய பீஈடீ 45 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்ககளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் என்பவற்றின் பொறுப்பு பணிப்பாளர் சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளமைக்கான பிரிவு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் நாயகத்தின் வரைவு அங்கீகாரத்தின் கீழ் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்

அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டு தேவையான அல்லது அனுசரணையான அனைத்தும் நிதியத்தின் பெயரில் மேற்கொள்வதற்கான அதிகாரம் நிதியத்தின் பணிப்பாளர் சபையின் நியமன காலத்தினுள் செல்லுபடியாக இருந்த போதிலும், 2014 நவம்பர் 12 ஆந் திகதி முதல் கூட்டங்களை நடாத்தி தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்ததுடன், இதன் காரணமாக நிதியத்தின் அனைத்து நடவடிக்கைகளும் மந்தகதியில் காணப்பட்டது.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ள உள்ளக கணக்காய்வு வழிகாட்டியின் 09 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு உள்ளக கணக்காய்வு அலகின் மூலமும் குறித்த அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்காக வருடாந்த உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் விநியோகிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களை அடிப்படையாகக் கொள்ள வேண்டுமென சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளது. எனினும் சிரம வாசனா நிதியத்திற்குரிய மேற்குறித்த கணக்காய்வு அவதானிப்பொன்றோ அல்லது காலாண்டு அறிக்கையொன்றோ அல்லது பொழிப்பறிக்கையொன்றோ தயாரித்து சமர்ப்பிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான செலவினத்திற்குமிடையே 14 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையான முரண்கள் வீச்சினைக் கொண்டிருந்ததுடன், பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) நிதிய முகாமைத்துவம்
(ஈ) உள்ளகக் கணக்காய்வு
(உ) செயலாற்றல்